கூட்ட எண் 11
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 30.11.2018.

2018-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30.11.2018.ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் அக்டோபர் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோகப் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் TN25Y0238க்கு 27.11.2018 அன்றுடன் வருடாந்திர இன்சூரன்ஸ் முடிவடைகிறது. இதனை 28.11.2018 முதல் 27.11.2019 வரை மீண்டும் ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள ரூ.18148/-யினை தி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் ஆரணி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். இச் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு இன்சூரன்ஸ் தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

4. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் வாகனம் எண் TN25AX9318 க்கு 16.11.2018 அன்றுடன் வருடாந்திர இன்சூரன்ஸ் முடிவடைகிறது. இதனை 17.11.2018 முதல் 16.11.2019 வரை மீண்டும் ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள ரூ.14.935-/-யினை தி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனில லிட் ஆரணி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். இச் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு இன்சூரன்ஸ் தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

5. ஆரணி நகராட்சி வார்டு எண் 32 கோட்டை மேற்கு தெரு கோட்ட வளர்ச்சி அலுவலகம் செல்லும் வழியில் உள்ள சிறுபாலத்தில் நடுவே அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் செல்லாமல் தேங்கியுள்ளதை சுகாதாரப் பணியாளர்களை கொண்டு அடைப்பி நீக்கி தற்காலிகமாக கழிவு நீர் செல்ல வழிவகை செய்யப்பட்டது. ஆனால், மீண்டும் அவ்விடத்தில் மீண்டும் அடைப்பு ஏற்படாத வகையில் சிறுபாலத்தின் நடுவில் 3அடிக்கு 3அடி துளையிட்டு சிமெண்ட் தளத்தை உடைத்து விட்டு அடைப்பு சரி செய்யப்பட்டது. மேற்படி துளையிட்ட சிறுபால பகுதியில் 3 X 3 அளவில் இரும்பு தகட்டிலான மூடி அமைத்திட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.20,000/- மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புத அளிக்கலாம், மேலும் மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டதையும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும், அனமதிக்கலாம். (கோப்பு எண் 761 / 2018 /இ1)

6. புதிய பேருந்து நிலையத்தில் கூடுதலாக அமைக்கப்பட்டு இயங்கி வரும் அம்மா உணவகத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கை அலம்பும் இடம், டோக்கன் வழங்கும் கேபின் மற்றும் அம்மா உணவகத்திலிருந்து சமைத்த பொருட்களை எடுத்துச் செல்ல மூன்று சக்கர மிதிவண்டி ஒன்று வாங்கவும் ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புத அளிக்கலாம், மேலும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும், மேற்படி பணிகள் மேற்கொள்ள தொடர் நடவடிக்கை எடுக்கவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

7. ஆரணி நகராட்சியில் 2018 - 2019 ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்பட உள்ள வளர்ச்சி பணிகள் மற்றும் தமிழக அரசின் சாதனைகள் குறித்த விளம்பரம் பின்வரும் தினசரி நாளிதழ்களில் ஆயுத பூஜை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலரில் ஆரணி நகராட்சி சார்பாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான விளம்ரப கட்டணம் ரூ. 78390.00 வழங்கவும், அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தினமணி நாளிதழ் | 18.10.2018 | ரூ.18900.00 |
| 2. | தினத்தந்தி நாளிதழ் | 19.10.2018 | ரூ.19530.00 |
| 3. | தினகரன் நாளிதழ் | 17.10.2018 | ரூ.19800.00 |
| 4. | தினமலர் நாளிதலு | 17.10.2018 | ரூ.20160.00 |
| | | ஆக மொத்தம் | ரூ.78390.00 |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

8. ஆரணி நகராட்சி சித்தா மருத்துவ அலுவலர் குறிப்பின்படி, ஆரணி நகரில் அனைத்து பள்ளி மாணவ மாணவியர்களுக்கும், நகர மக்களுக்கும் 2018-2019ம் ஆண்டில் நிலவேம்பு வழங்க வேண்டியுள்ளது. எனவே, 2018-2019ம் ஆண்டிற்கு நிலவேம்பு கசாய பொடி 300KG தேவைப்படுவதால் அவற்றி அரசு நிறுவனமான TAMPCOLல் வாங்க தோராய செலவினம் ரூ. 95130/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 5783/2017/எச்1)

9. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர்-12 அவர்களின் 18.10.2018ந் தேதிய நேரடி ஆய்வின் மூலம் தெரிவித்தவாறு இந் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு நோய் தடுப்பு ஸ்டிக்கர் வீடுதோறும் ஒட்டும் வகையில் 8000 அச்சடிக்கவும், மேலும், கொசு உற்பத்தி இடங்கள் கண்டறிய வாரந்தோறும் கையொப்பம் இடும் காலண்டர் அச்சடிக்கவும் ஆகும் தோராய செலவினம் ரூ.32000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். அவசர அவசயம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1592/2014/எச்1)

10. ஆரணி நகராட்சி **11.62** சதுர கி.மீ. பரப்பளவுடன் **33** வார்டுகளாக அமைந்துள்ளது. **2011** மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை **63263** இந்நகராட்சியில் தற்போது தினசரி **5.10** மில்லியன் லிட்டர் குடிநீர், நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு **81** லிட்டர் என்ற அளவில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், **2018–19**ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.**34**–ற்கான விவாதத்தின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு எண்.**14**ல் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*“மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) நிறுவப்படும்”*

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* தனியார் தொழில் நிறுவனங்களுடன்/ தொழிற் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று (Corporate Social Responsibility fund) செயல்படுத்தவும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்யவும் பார்வையில் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சியில் அமைந்துள்ள 33 வார்டுகளிலும் தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* அமைப்பதற்கான மதிப்பீடு விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண் மற்றும் இடத்தின் விவரம் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண் 01 ல் சமுதாய கூட கட்டடம் | 15.00 |
| 2 | வார்டு எண் 02 ஆரணிப்பாளையம் தர்மராஜா கோயில் பின்புறம் | 15.00 |
| 3 | வார்டு எண் 03 சாந்தா தெரு | 15.00 |
| 4 | வார்டு எண் போலீஸ் ஸ்டேஷன் தெரு | 15.00 |
| 5 | வார்டு எண் 05 வராகமூர்த்தி தெரு அங்கன்வாடி மையக்கட்டடம் | 15.00 |
| 6 | வார்டு எண் 06 வடக்குமாட வீதி நகராட்சி பள்ளி | 15.00 |
| 7 | வார்டு எண் 07 ஆண்டாள் சன்னதி தெரு | 18.00 |
| 8 | வார்டு எண் 08 பரசுராமன் தெரு விரிவு (செயின் மேரிஸ் நகர்) | 15.00 |
| 9 | வார்டு எண் 09 இந்திரா நகர் நீர் இறைவை நிலையம் | 15.00 |
| 10 | வார்டு எண் 10 சத்தியமூர்த்தி ரோடு (ராஜேஸ்வரி தியேட்டர் அருகில்) | 15.00 |
| 11 | வார்டு எண் 11 கான்ட்ராக்டர் பொன்னுசாமி தெரு | 15.00 |
| 12 | வார்டு எண் 12 மாதவராயன் பேட்டை தெரு (சித்தா மருத்துவ மனை) | 15.00 |
| 13 | வார்டு எண் 13 கண்ணப்பன் தெரு நகராட்சி பள்ளி | 15.00 |
| 14 | வார்டு எண் 14 திருவள்ளுவர் தெரு | 15.00 |
| 15 | வார்டு எண் 15 களத்து மேட்டுத் தெரு (near Vambay Toilet) | 15.00 |
| 16 | வார்டு எண் 16 பழனி ஆண்டவர் கோயில் தெரு | 18.00 |
| 17 | வார்டு எண் 17 மருசூரான் தெரு நகராட்சி பள்ளி | 18.00 |
| 18 | வார்டு எண்18 அம்பேத்கார் நகர் | 18.00 |
| 19 | வார்டு எண் 19 சுந்தரம் தெரு | 18.00 |
| 20 | வார்டு எண் 20 கார்த்திகேயன் ரோடு | 15.00 |
| 21 | வார்டு எண் 21 தியாகி சுப்பிரமணியன் தெரு | 15.00 |
| 22 | வார்டு எண் 22 தாய்சேய் நல மையம் (சுப்பிரமணிய சாமி கோயில் தெரு) | 18.00 |
| 23 | வார்டு எண் 23 தச்சூர் ரோடு நகராட்சி பள்ளி | 15.00 |
| 24 | வார்டு எண் 24 தண்டு மாரியம்மன் கோயில் தெரு | 15.00 |
| 25 | வார்டு எண் 25 சைதை பாலாஜி நகர் நகராட்சி பள்ளி | 15.00 |
| 26 | வார்டு எண் 26 கைங்கையம்மன் கோயில் தெரு | 15.00 |
| 27 | வார்டு எண் 27 முள்ளிப்பட்டு ரோடு (சைதை தர்மராஜா கோயில் பின்புறம்) | 18.00 |
| 28 | வார்டு எண் 28 சைதை அனந்தபுரம் நகராட்சி பள்ளி | 15.00 |
| 29 | வார்டு எண் 29 காந்தி நகர் பூங்கா | 15.00 |

| | | |
|---|---|---|
| 30 | வார்டு எண் 30 வி.ஏ.கே நகர் | 15.00 |
| 31 | வார்டு எண் 31 நகராட்சி அலுவலக வளாகம் | 15.00 |
| 32 | வார்டு எண் 32 வெங்கட்ராமன் பூங்கா அருகில் | 15.00 |
| 33 | வார்டு எண் 33 பள்ளிக்கூடத் தெரு | 15.00 |
| | **மொத்தம்** | **513.00** |

ஆரணி நகராட்சியில் உள்ள 33 வார்டு பகுதிகளில் தானியங்கும் குடிநீர் மையங்கள் (*Automatic Vending Centers)* அமைக்கும் பணி மேலே பட்டியலில் கண்டுள்ள மதிப்பீட்டின்படி மேற்கொள்ள “Expression of Interest” கோரவும், இத்திட்டப்பணிக்கான முழுத் தொகை மற்றும் பராமரிப்புச் செலவினம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பங்களிப்பு பெற்று இத்திட்டம் மேற்கொள்ளவும், அனுமதி வேண்டி திட்டப் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிக்கான அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 2283 / 2018 /இ1)

11. இந் நகராட்சிக்கு சொந்தமான வண்டிமேடு செல்லும் வழியில் உள்ள 7கடைகள் மற்றும் மூங்கில் மண்டி கடை 1 ஆகிய 8 கடைகள் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே, கடைகளை இடித்து அப்புறப்படுத்தலாம் என 25.04.2018 அன்று இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் குறிப்பு மற்றும் வருவாய் ஆய்வாளர் குறிப்பு நாள் 25.04.2018யின்படி மேற்படி கடை குத்தகைதாரர்களுக்கு கடைகளை காலி செய்து நகராட்சி வசம் ஒப்பகுமாறு 25.04.2018 மற்றும் 30.10.2018 ஆகிய தேதிகளில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. மேலும கடை குத்தகைதாரர்கள் 2017-2018 முதல் 2019-2020 வரையில் தங்களுக்கு குத்தகை காலம் உள்ளது என தெரிவித்து தாமாக முன்வந்து கடைகளை பூட்டி சாவி ஒப்படைத்துள்ளனர். எனவே, மேற்படி குத்தகைதாரர்களின் முன் ஏலம் மூலம் பெறப்படும் தொகையை வைத்து அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி, மேற்படி கடைகளை பொது ஏலம் கோரலாம் என வருவாய் ஆய்வாளர் குறிப்பு வழங்கியுள்ளார். எனவே, இது குறித்து மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி கடைகளுக்கு பொது ஏலம் கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 987/அ3/2018)

12. ஆரணி நகராட்சி வார்டு எண் 29 காந்தி நகர் முதல் தெருவில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்த நிலையல் போக்குவரத்திற்க மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், மேற்படி தெருவிற்கு பாரதியார் தெரு பிரதான தெரு பகுதியிலிருந்து காந்தி நகர் பகுதிக்கு செல்லும் வழியாக உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட பழுதடைந்த சிறுபாலத்தினை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 0.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், பொது மக்களின் நலன் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பணியினை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்., மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

13. ஆரணி நகராட்சி வார்டு எண் 03 சாந்தா தெருவில் உள்ள மூன்று சிறுபாலங்கள் மிகவும் பழுதடைந்து பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும சிரமமாக உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள மூன்று சிறுபாலங்களை அகற்றி விட்டு புதியதாக அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 60000/-க்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், பொது மக்களின் நலன் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பணியினை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்., மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

15. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி - 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **20.11.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br>**வருவாய் நிதி** | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பாலாஜி நகர், காந்தி நகர், கே.பி.கே நகர், மற்றும் மாடு அடிக்கும் இடம் ஆகிய இடங்களில் முட்புதர்கள் மற்றும் கழிவுகளை JCB இயந்திரத்தின் மூலம் அகற்றி சமன் செய்தல் | 0.75 | பி. சந்திரசேகர்<br>இ.இளங்கோவவன் | 0.05 % குறைவு<br>0.70 % அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சி பொது சுகாதார வாகன எண் TN25V9463 TATA ACE பழுது பார்த்தல் | 1.10 | பிரதீப் ஆட்டோ ஒர்க்ஸ், வேலூர் -4<br>ஸ்ரீமுனிரத்திரனம் ஆட்டோ மொபைல்ஸ் வேலூர்-6 | ரூ. 107760/-<br>ரூ. 123290/- |
| 3 | ஆரணி நகராட்சி பொது சுகாதார வாகன எண் TN25V4633 TATA 407 பழுது பார்த்தல் | 1.90 | பிரதீப் ஆட்டோ ஒர்க்ஸ், வேலூர் -4<br>ஸ்ரீமுனிரத்திரனம் ஆட்டோ மொபைல்ஸ் வேலூர்-6 | ரூ. 186170/-<br>ரூ. 205776/- |
| 4 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான 4 எண்ணிக்கை பூங்காக்களில் இரண்டு தொட்டிகள் மற்றும் மேற்கூறை அமைத்தல் | 4.50 | சக்தி கன்ஸ்ரக்ட்சன்ஸ், திண்டிவனம்<br>இ. இளங்கோவன் | 0.03 % குறைவு<br>0.12 % அதிகம் |
| 5 | <u>**கல்வி நிதி**</u> ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அம்சவேணி அம்மாள் நகராட்சி பள்ளியின் இரும்பு கிரில் கேட் பழுது சரி செய்து, கேட்டினை பொருத்த காண்கிரீட்டிலான தூண்கள் அமைத்தல் | 0.50 | அ.அசோக்குமார்<br>எம். பழனி | 0.04 % குறைவு<br>0.80 % அதிகம் |
| 6 | ஆரணி நகராட்சி வார்டு எண் 23ல் தச்சூர் சாலையில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளி கட்டட தரைதளம், மேற்கூறை பழுது சரி செய்தல் | 3.00 | அ.அசோக்குமார்<br>எம். பழனி | 0.03 % குறைவு<br>0.40 % அதிகம் |
| 7 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கண்ணப்பன் தெரு, பழனி ஆண்டவர் கோயில் தெரு, மருசூரான் தெரு, சைதை சீத்தாராமன் தெரு, சைதை அனந்தபுரம் தெரு ஆகிய பள்ளிகளில் புதியதாக சுத்திகரிப்பட்ட குடிநீர் இயந்திரம் பொருத்தும் பணி | 5.00 | மித்ரா அசோசியேட்ஸ் திருப்பூர் - 641 041<br>கெலின்ஸ் ஆக்குவாடெக் சொலுஷன் கோயம்புத்தூர் 641 006 | 0.06 % குறைவு<br>0.50 % அதிகம் |
| 8 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பள்ளிகளில் பழுதடைந்துள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் பழுது சரி செய்து வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 7.00 | மித்ரா அசோசியேட்ஸ் திருப்பூர் - 641 041<br>கெலின்ஸ் ஆக்குவாடெக் சொலுஷன் கோயம்புத்தூர் 641 006 | 0.06 % குறைவு<br>0.50 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

16. தமிழ்நாடு அரசாணை எண் 39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 29.04.2017 ன்படி நகராட்சிகளில் பராமரிக்கப்படும் தற்போதுள்ள தெருவிளக்கு கட்டமைப்புகளை உரிய முறையில் ஆய்வு செய்த தற்போதைய தன்மை அறிந்து அதற்கேற்ப மாற்றி அமைத்திட வேண்டிய ஒளிர் உமிழ் விளக்குகளின் தன்மையை நிர்ணயித்து அவற்றிக்கு ஆகும் செலவினை கணக்கிட்டு செலவுத் தொகையை மீளப்பெறும் திட்டக்காலத்தை கணக்கிட்ட உரிய திட்ட வரைவுகளை தயாரித்து வழங்கிட மின் சேமிப்பு கணக்கீட்டு முகவர்களை நியமிக்கவும், அதற்காகும் செலவினத்திற்கு இந் நகர மன்ற தீர்மான எண் 16 நாள் 28.04.2018ந் தேதிய தீர்மானத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக இயக்குநர் வேலூர்-12 அவர்களின் கடிதத்தில், மேற்குறிப்பிட்டுள்ள பணியினை மேற்கொண்ட நிறுவனமான M/s Active Energy OPC Private Ltd. Chennai என்ற நிறுவனத்திற்கு நகராட்சியின் பங்களிப்பு தொகை ரூ123991/-யினை வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 872/2017/இ1)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.